2009 பிப்ரவரி 17] [பேராசிரியர் க. அன்பழகன்]

பள்ளிகளுக்கும் மேனிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றி, அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் இயங்கும் அனைத்து நடுநிலைப் பள்ளிகளுக்கும் 3 ஆண்டு காலத்தில் கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் சென்ற வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2,200 பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் மேலும் 2,500 நடுநிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்க ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

36. தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் சுமார் 11 இலட்சம் மாணவ மாணவியர்க்கு 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு கட்டணத்தையும், 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 50 இலட்சம் மாணவ, மாணவியர் செலுத்தி வந்த சிறப்புக் கட்டணத்தையும், அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவியர்கள் செலுத்திவந்த சிறப்புக் கட்டணத்தையும் இந்த அரசு இரத்து செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முழுமையான இலவசக் கல்வி அளிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

37. நமது மாநிலத்தில் உள்ள நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குக் கண் பார்வைப் பரிசோதனை செய்து, பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதற்கான புதிய திட்டம், தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின்மூலம், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வரும் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

38. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 58 கோடியும், இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 70 கோடியும் வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இலவச மற்றும் சலுகைக் கட்டணத்தில் பேருந்துப் பயணச் சீட்டு வழங்குவதற்காக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மானிய உதவியாக ரூபாய் 300 கோடியும், பதினொன்றாம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 112 கோடியும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.